# வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

## தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்

**தரம்: 8** **நேரம்: 2மணித்தியாலம்**

## பகுதி I

1. கணினியில் முறைவழியாக்கப்பட்ட தரவுகளை வருவிளைவாக தரும் சாதனம் எது?
   1) முறைமை அலகு 3) விசைப்பலகை
   2) நுணுக்குப்பன்னி 4) பல்லூடக எறிவை
2. 4ம் தலைமுறைக்கணினிகளில் பயன்படுத்தப்பட்ட தொழினுட்பம் யாது?
   1) வெற்றிடக்குழாய் 3) நுண்முறைவழியாக்கி
   2) திரான்சிஸ்ரர் 4) ஒன்றிணைந்த சுற்று
3. பின்வரும் தேக்க சாதனங்களில் காந்த ஊடக சாதனம் யாது?
   1) வன்வட்டு 3) இறுவட்டு
   2) பளிச்சிட்டு நினைவகம் 4) நினைவக அட்டை
4. சூட்டிகை சாதனங்களை இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் துறை யாது?
   1) VGA துறை 3) Micro USB துறை
   2) RJ45 4) PS/2
5. எளிய வன்பொருள்சார் பிரச்சினையொன்றிற்கு உதாரணமாக அமைவது?
   1) இயக்கமுறைமை செயலிழத்தல்
   2) சுட்டி தொழிற்படாமை
   3) கணினி தொழிற்படுவதற்கு அதிக நேரம் செல்லுதல்
   4) பிரதான சேமிப்பகத்தில் வெற்றிடம் குறைதல்
6. உமது கணினியில் விரிதாள் மென்பொருளை திறக்க முடியாதுள்ளது. இதற்கு காரணமாக அமையக்கூடியது.
   1) நச்சுநிரல் செயற்பாடகும்
   2) விரிதாள் மென்பொருள் பழுதடைந்திருக்கலாம்
   3) இலவசமாக பரீட்சார்த்தத்திற்கென தரப்பட்ட காலம் முடிவடைந்திருக்கலாம்
   4) மேற்குறிப்பிட்ட எல்லா காரணத்தினாலாக இருக்கலாம்
7. A என்பவரது வயது 60 ஆகும். B என்பவரால் வயது 39 ஆகும். இருவரினதும் வயது வித்தியாசத்தை குறித்துக் காட்டுவது.
   1) $10101_2$ 3) $10001_2$
   2) $10100_2$ 4) $11110_2$
8. இருமஎண் $101101_2$ இற்குச் சமவலுவான பதின்ம எண் யாது?



kalvi.lk

1) 44
2) 45
3) 89
4) 25


9. சொல்முறைவழிப்படுத்தல் ஆவணமொன்றின் உள்ளடக்கம் எல்லாவற்றையும் தெரிவு செய்ய பயன்படுத்தப்படும் குறுஞ்சாவி யாது?

1) Ctrl+S
2) Ctrl+z
3) Ctrl+A
4) Ctrl+P


10. சொல்முறைவழிப்படுத்தலில்  இப்படவுரு குறிப்பது?


1) எழுத்துருவகை மாற்றல்
2) எழுத்தினை தடிப்பாக்கல்
3) எழுத்தமைப்பு, இலக்கணமுறைமை சரிபார்த்தல்
4) எழுத்தின் அளவை மாற்றுதல்

11. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் வடிவங்களை உள்ளிடுவதற்கு தெரிவு செய்ய வேண்டிய படவுரு யாது?

1) 
2) 
3) 
4) 

12. தரப்பட்ட பாய்ச்சற்கோட்டுப்படத்திலுள்ள கட்டுப்பாட்டு கட்டமைப்பு யாது?



1) தொடரி
2) தெரிவு
3) மீள்செயல்
4) எழுமாற்று


13. பின்வரும் தருக்க தொகுதிகளில் உண்மை எனும் கூற்றை வருவிளைவாக தருவது?


1) 


2) 


3)
4) 


14. தரப்பட்ட தருக்க சுற்றின் வருவிளைவு 1 இனை தருவது?

1) 

2) 

3) 

4) 




kalvi.lk

15. தரப்பட்ட மெய்நிலை அட்டவணைக்குரிய தருக்கப்படலை யாது?

1) AND

2) OR

3) NOT

4) NOR

| A | B | C |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 1 |


16. பின்வருவனவற்றுள் தேடற்பொறி அல்லாதது?

1) Chrome
2) Google
3) Yahoo
4) Bing

17. இணையப்பக்கத்தில் படம் ஒன்றினை காட்சிப்படுத்த பயன்படுத்தப்படும் அடையாள ஒட்டு யாது?

1) <h1>
2) <br>
3) <img src>
4) <image>

18. தரப்பட்டுள்ள Scratch கூற்றுக்களின் இறுதி வருவிளைவு யாது?




1) -5
2) 5
3) 15
4) 0

19. Scratch செய்நிரல் மேடை மீது கோடுகளையும் வடிவங்களையும் வரைவதற்கு தேவையான நிறங்களும் கருவிகளும் காணப்படும் தொகுதி யாது?

1) Motion
2) Sound
3) Pen
4) Sensing

20. பின்வரும் வருவிளைவினை இணையப்பக்கம் ஒன்றில் காட்சிப்படுத்துவதற்கு வேண்டிய அடையாள ஒட்டு யாது?

- Bambarakanda Ella
- Diyaluma Waterfall
- Dunhinda Waterfall

1) <ol>
2) <i>
3) <ul>
4) <p>

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

## முதலாம் வினாவும் ஏனைய இரண்டு வினாக்களும் உட்பட மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1.

i. கணினி முறைமையினுள் தரவுகளின் பரிமாற்றம் கீழே தரப்பட்டுள்ளது. முறைமைக்குரிய பொருத்தமான ஆங்கில எழுத்தினை எழுதுக.

a. முறைவழியாக்கி மூலமாக தரவு முறைவழியாக்கப்படல்

b. முறைவழியாக்கப்பட்ட தரவு வருவிளைவாக அனுப்பப்படல்

c. இலக்கமுறைகமரா மூலமாக தரவு உள்ளிடப்படல்

உள்ளீடு - .......... முறைவழியாக்கம் - ........... வெளியீடு - ...........

ii. பின்வரும் இரும எண்களை பதின் எண்ணாக மாற்றுக. படிமுறையினை தருக.

a. $101010_2$ b) $1101_2$

iii. பின்வரும் பதின்ம எண்களை இரும எண்ணாக மாற்றுக. படிமுறையினை தருக.

a. $55_{10}$ b) $156_{10}$

iv. My presentation.ppt எனும் கணினி கோப்புக்குரிய கோப்புப்பெயர், கோப்பு நீட்சி என்பவற்றை தருக.

v. நிரல் A இற்குப் பொருத்தமான நிரல் B ஐ தெரிவு செய்க.

| | A | B |
|---|---|---|
| 1 |  | USB |
| 2 |  | Micro USB |
| 3 |  | RJ45 |
| 4 |  | Parallel |

vi. சொல்முறைவழிப்படுத்தல் அட்டவணையில் உள்ள நிரல், நிரை, கலங்கள் என்பவற்றின் எண்ணிக்கை யாது?

| | |
|---|---|
| | |
| | |

நிரல் - .............

நிரை - ............

கலங்கள் - ............



kalvi.lk

vii. பாற்ச்சற்கோட்டுப்படத்தில் பயன்படுத்தப்படும் கட்டுப்பாட்டு கட்டமைப்புகள் எவை?

viii. சூட்டிகைச்சாதனத்திற்கு இரு உதாரணம் தருக.

ix. அடிப்படைத் தருக்கப்படலைகளை தந்து அவற்றிற்கான வரிப்படத்தினை வரைக.

x. இணையத்தளத்தினை தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் ஒட்டுக்களுக்குரிய பயன்பாட்டினை அடைப்புக்களிலிருந்து தெரிந்தெடுக்க.

a. <body>
b. <i>
c. <br>
d. <b>

(தடிப்பாக்கல், சரிவாக்கல், இணையத்தள உள்ளடக்கம் இடுவதற்கான எல்லை, பந்தி பிரிப்பு)


(10 x 2= 20 புள்ளிகள்)

2.


a) சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் உள்ள வசதிகள் 4 தருக.

(4 x 1.5 = 6 புள்ளிகள்)

b) தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவன் கணினி ஆய்வுகூடத்தில் காட்சிப்படுத்துவதற்காக சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் மூலம் உருவாக்கிய சுவரொட்டியினை கீழுள்ள உரு காட்டுகின்றது.



A - F வரையிலான வடிவமைப்பிற்கு பயன்படுத்திய கருவிகளை கருவிப்பட்டையில் குறிப்பிட்ட இலக்கங்களை பயன்படுத்தி எழுதுக.




A ---------------------------- B --------------------------------

C ---------------------------- D --------------------------------

E ----------------------------- F ------------------------------


G -----------------------------

(7 x 2 = 14 புள்ளிகள்)

3. கீழுள்ள பாய்ச்சற்கோட்டுப்படத்தின் a,b,c,d ஆகியவற்றின் மூலம் காட்டப்பட்டுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு கீழ்வரும் பதங்களைக் கொண்டு நிரப்பவும்.

(முடிவு, அகலம், இல்லை, ஆம்)

a)





(4 x 2 1/2= 10 புள்ளிகள்)



kalvi.lk

b) நீளம், அகலம் என்பவற்றை பெற்று சதுரமா/ செவ்வகமா என அறிவதற்கான Scratch செய்நிரல் கீழே தரப்பட்டுள்ளது. 1 தொடக்கம் 5 வரையான இடங்களுக்குப் பொருத்தமான அறிவுறுத்தல் தொகுதியினை எழுதவும்.




1 - ........................................................

2 - ........................................................

3 - ........................................................

4 - ........................................................

5 - ........................................................


(5 x 2 = 10 புள்ளிகள்)

4.

a) இணையத்தளத்தினை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மென்பொருள் 4 தருக. (4 x 1.5 = 6 புள்ளிகள்)

b) கீழே HTML குறிமுறைக்குரிய வருவிளைவு தரப்பட்டுள்ளது. 1 தொடக்கம் 6 வரையுள்ள முகப்பு அடையாளமிடப்பட்ட HTML அடையாள ஒட்டுக்கள் காணப்படுகின்றன. முகப்பு அடையாள இலக்கங்களுக்குரிய பொருத்தமான அடையாள ஒட்டினை பட்டியலில் இருந்து எழுதுக.

(பட்டியல் : I, U, H2, A HREF, B, IMG SRC, P, UL, OL)




(7 x 2 = 14 புள்ளிகள்)

kalvi.lk

Education
The National e-learning Portal for The General Education



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL MEDIUM

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

**GRADE 8**

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

FREE ADMISSION

075 287 1457

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- Spoken English Classes.
- Sinhala Reading and Writing Classes.
- Map Marking Classes

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page